# செயலாற்றல் அறிக்கை

# 2013

## உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

# உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| கௌரவ அமைச்சரின் செய்தி | 1-2 |
| கௌரவ பிரதி அமைச்சரின் செய்தி | 3 |
| செயலாளர் அவர்களின் செய்தி | 4 |
| 1. அமைச்சின் தூரநோக்கு | 5 |
| 2. அமைச்சின் செயற்பணி | 5 |
| 3. அமைச்சின் குறிக்கோள்கள் | 6 |
| 4. குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதான துறைகள் | 7-8 |
| 5. மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கிலுள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்குரிய விடயங்கள் | 9 |
| 6. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு பிரிவுகளும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | 10 |
| 7. அமைச்சின் முக்கிய பணிகள் | 11 |
| 8. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பரப்பினுள் அடைந்துள்ள வெற்றிகள் | 12-13 |
| 9. செயலாற்றுகை - 2013 | 14-40 |
| 10. பிரதான மாகாண மற்றும் பிரதேச அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | 41-42 |
| 11. செயற்திட்டத் தொடர் | 43-54 |
| 12. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் | 55-58 |
| 13. உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் | 59-63 |



# கௌரவ அமைச்சரின் செய்தி

"கிராமத்தைப் பலப்படுத்துவதன் ஊடாக நாட்டைப் பலப்படுத்துவோம்" என்ற தொணிப்பொருளின் கீழ் கிராமத்தை முன்னேற்றி நாட்டை அபிவிருத்தி செய்யும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலின் மூலம் அபிவிருத்தியில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க யதார்த்தமாகியுள்ளது. அதற்கமைய, உள்ளூராட்சித்துறையிலும் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்த நகல் சட்டமும், உள்ளூராட்சி விஷேட ஏற்பாடுகள் திருத்த நகல் சட்டமும் 2012.10.10ம் திகதி பாராளுமன்றத்தில் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டமை இந்நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் விஷேடமாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்குக் கிடைத்த வரலாற்று முக்கயத்துவம் வாய்ந்த வெற்றியாகும் என்பதனை கூறிக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். தற்போது உள்ளூராட்சி அதிகாரசபைகளின் அதிகாரப் பிரதேசத்திற்கான புதிய எல்லைகளை நிர்ணயிக்கும் நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமான முறையில் இறுதிக் கட்டத்தினை அடைந்துள்ளது என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் "மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின்" படி உள்ளூராட்சித் துறையில் "நல்லாளுகையினை" ஸ்தாபித்து நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அர்த்தமுள்ளதாக நடைமுறைப்படுத்துவதற்கு எமது அமைச்சின் மூலம் அதன் கீழுள்ள ஊள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனத்தினாலும் பல்வேறு விஷேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், வருமான மட்டம் குறைவாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களை இனங்கண்டு அவற்றின் மீது விஷேட கவனம் செலுத்தி அவ் உள்ளூராட்சி அதிகாரசபைப் பிரதேசங்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்கி நாட்டை முன்னோக்கிய பாதையில் இட்டுச் செல்லும் செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே மூன்று தசாப்தகால கொடிய யுத்தத்தினால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களை மீண்டும் பலப்படுத்தி மக்கள் பிரதிநிதிகள் மூலம் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சந்தர்ப்பத்தினை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையை முக்கியமானதாக கருதுகின்றேன்.

மேலும் "புரநெகும" செயற்திட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறும் நூறுக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான நிதிகள் ஏற்பாடு செய்து வழங்கப்பட்டுள்ளன. அதனூடாக திட்டமிடப்பட்ட முறையில் சிறிய நகரங்களை நிர்மாணித்து மேம்படுத்தும் நோக்கமுள்ளது. அத்துடன், நான் இந்த அமைச்சினைப் பொறுப்பேற்ற பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்களில் பல காலமாக பிரதான குறைபாடாகக் காணப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான இயந்திர உபகரணங்களின் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வினை வழங்கும் நோக்குடன் மோட்டார் வாகனங்களும் இயந்திர உபகரணங்களும் அதிக எண்ணிக்கையான உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சவாலாகக் காணப்படுகின்ற கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டத்தினை முறைப்படியாகவும் பலமான முறையிலும் நடைமுறைப்படுத்துவதற்கான உதவியாக அதற்குத் தேவையான நிதி வசதிகளையும், இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்களையும் வழங்குவதற்காக எனது அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களினால் பராமரித்து வரப்படுகின்ற அவசர இடர் முகாமைத்துவ வேலைத்திட்டத்தினை பலப்படுத்துவதற்காக அதற்குத் தேவையான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வழங்குவதற்கும் வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று சகல உள்ளுலாட்சி நிறுவனங்களின் கீழுள்ள இயற்கை வளங்களையும், சுற்றாடலையும் உரிய முறையில் பேணிப்பாதுகாப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அதனூடாக உள்ளூராட்சி நிறுவனங்கள் திருப்தியான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக வங்கி (World Bank), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA), போன்ற கடன் உதவிகளுடன் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் மூலம் வடக்கு, கிழக்கு, ஊவா, மத்திய, சப்ரகமுவ, வட மத்திய போன்ற மாகாணங்களிலுள்ள வீதிகளை

ஊவா, மத்திய, சப்ரகமுவ, வட மத்திய போன்ற மாகாணங்களிலுள்ள வீதிகளை நிர்மாணித்து, மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான அநேக செயற்திட்டங்கள் தற்போது வெற்றிகரமாக பூரணப்படுத்தி வரப்படுகின்றன. அவ்வாறே உலக வங்கி (World Bank) இன் கடன் உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அறிவின் கேந்திர மையமாகக் கருதப்படுகின்ற பாடசாலைக் கல்வி முறைமையினை மறுசீரமைக்கும் செயற்திட்டத்தினால் (TSEP) நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் சொந்தமான பாடசாலைகளின் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் இலக்குடன் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றும் நடவடிக்கைகளும் அவ்வாறே ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினையும் பேணிச்செல்லும் நடவடிக்கைகளும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளன.

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் விஷேட வழிகாட்டுதலின் கீழ் எனது அமைச்சின் கௌரவ பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக்க, அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்களினதும் அயராத ஒத்துழைப்புக்கு நான் நன்றி கூறுவதுடன் இந்த ஆண்டைப் போன்றே கடந்த காலங்களிலும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் துறைசார் வெற்றிகளுக்கு நல்கிய ஒத்துழைப்பிற்காக சகல மாகாணங்களினதும் கௌரவ ஆளுனர்கள், கௌரவ மாகாண சபை அமைச்சர்கள் அடங்கலாக கௌரவ உறுப்பினர்கள் உள்ளிட்ட உயர் பதவியணியினர்களுக்கும், கௌரவ மாநகர முதல்வர்கள், நகர சபைகளின் பிரதேச சபைகளின் கௌரவ தவிசாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கும், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியை உளப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏ.எல்.எம். அதாஉல்லா, பா.உ.
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர்



# கௌரவ பிரதி அமைச்சர் அவர்களின் செய்தி

மஹிந்த சிந்தனை தேசியக் கொள்கை வேலைத்திட்டங்களை யதார்த்தமானதாக மாற்றி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அபிவிருத்தியின் நலன்களை எல்லாப் பிரதேசங்களுக்கும் சமநிலையாக வழங்குவதற்கு நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்களையும் சுயமான பொருளாதார அபிவிருத்தித் துறையினுள் கட்டியெழுப்புவதற்காக விசேட வேலைத்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2013 இன் பாதீட்டுப் பிரேரணைகளை சமர்ப்பித்து குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்காகவும் மாகாணங்களிலுள்ள வறுமையைக் குறைப்பதற்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்காகவும் முன்மொழியப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள் இந்த அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், அந்த வேலைத்திட்டங்களை பலப்படுத்துவதற்காக புரநெகும, சிறிய மற்றும் நடுத்தர அளவு நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பயனுள்ள பங்களிப்பினை வழங்குவதுடன் உள்ளூராட்சித் துறையினை பொதுமக்கள் சார்ந்ததாக மறுசீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, உள்ளூராட்சி சட்டதிட்டங்களை திருத்தியமைத்து அபிவிருத்திக்கு உகந்த சூழலை நாடு முழுவதிலும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக உருவாக்குவதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அர்ப்பணிப்புடன் தன்னை ஈடுபடுத்தியுள்ளமை குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன்.

கௌரவ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் இச்செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சின் செயலாற்றலுக்கு பங்களித்த சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியறிதலை கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இந்திக்க பண்டாரநாயக்க, பா.உ
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் பிரதி அமைச்சர்



# செயலாளர் அவர்களின் செய்தி

மஹிந்த சிந்தனை – எதிர்கால தூரநோக்கு தேசிய அபிவிருத்திக் கொள்கை வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி ஆசியாவிலும் அதேபோன்று உலகத்திலும் துரிதமாக அபிவிருத்தி அடையும் நாடாக இலங்கை துரித அபிவிருத்திப் பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளது.

பிரதான அபிவிருத்தித் துறைகளினுள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஐம்பூத மைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தவிர்ந்த, மாகாண மற்றும் பிரதேச மட்டங்களிலும், நகர மற்றும் கிராமிய ரீதியிலும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, மாகாண சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுடன் இணைந்து நிறைவேற்றும் கடமைப் பொறுப்புக்கள் அளவற்றதாகும்.

உள்ளூராட்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் துரிதமடைந்ததனைத் தொடர்ந்து பொது மக்களுக்கு சேவைகளை வழங்குகையில் மக்கள் நேயமுள்ள சுற்றாடலொன்றை கட்டியெழுப்புவதற்காக நடவடிக்கை எடுப்பதன் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேநேரம், உள்ளூராட்சி நிறுவனங்களின் அலுவலக வளவினை மக்கள் நேயம் கொண்ட சுற்றாடலொன்றாக சிறந்த சேவை வழங்கும் மையமாக உருவாக்கவதற்கும், கவர்ச்சிகரமான உளங்கவரக்கூடிய தூய்மையான சிறிய நகரமாக தெரிவு செய்யப்பட்ட நகரங்ளை அபிவிருத்தி செய்வதற்காக ''புறநெகும'' என்ற வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும், அத்திட்டத்தின் கீழ் சிறிய நகரங்களினை இணைக்கும் இலகுவான நுழைவுப்பாதைகளை அமைத்தல், வாரச்சந்தைகள், நூல் நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள், மலசலகூடங்கள், வாகன தரிப்பிடங்கள், இளைப்பாறும் இடங்கள் ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் போன்றவைகள் இத்திட்டத்தின் கீழ் அமையும், அதேபோல் குப்பைகளை முகாமைத்துவப்படுத்தும் வேைலத்திட்டங்களும் மற்றும் கொழும்பு நகரினுள் அமைக்கப்பட்டுள்ள நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த மலசலகழிவுகளையும் அசுத்த நீரினையும் அகற்றிவரும் கால்வாய்களை துப்பரவு செய்தல், தேசிய வீதிகளை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிற்கு நடவடிக்கை எடுப்பதுடன் இந்த சகல அபிவிருத்திச் செயற்பாடுகளிற்காகவும் ஈடுபட்டுள்ள அரசியல் தலைமைத்துவத்தினையும் உத்தியோகத்தர்களையும் அறிவுறுத்தி உளரீதியான மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்துடன் 2013 ஆம் வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் அடங்கியுள்ள முன்மொழிதல்கள் ஊடாக அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் தோற்றுவித்து நடைமுறைப்படுத்துவதற்காக அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கொள்கை வழிகாட்டலுக்கும் கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் போன்றோரின் நெறிப்படுத்தலுக்கும் எனது பதவியிணியினரதும் உள்ளூராட்சி மன்றங்களினதும் மற்றும் மாகாண சபை துறைசார் நிறுவனங்களினதும் ஒத்துழைப்பிற்கும் இவ்வேளையில் எனது கௌரவமான நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க
செயலாளர்
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

1

# அமைச்சின் தூரநோக்கு

அதிகாரப் பகிர்வு, பன்முகப்படுத்தல் மற்றும் பங்கேற்றல் ஆட்சிமுறைக்கு மாறுவதன் மூலம் இலங்கையில் சமத்துவமானதும் நிலையானதுமான அபிவிருத்தியைத் தாபிப்பதற்குச் செயற்படுகின்ற முன்னுரிமை வாய்ந்த, முன்னோடி நிறுவனமாதல்.

2

# அமைச்சின் செயற்பணி

பொதுமக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியவாறான வினைத்திறமை வாய்ந்ததும் பயன் வாய்ந்ததுமான மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி முறையொன்றை உறுதி செய்தல் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கட்டமைப்பை வலுவூட்டுவதன் மூலம் இலங்கையில் சமத்துவமானதும் நிலையானதுமான மானிட அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்கு வசதிகளை வழங்குதல்.

# 3

# அமைச்சின் குறிக்கோள்கள்

- மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்குமிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.
- மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை வகுத்தல்.
- தேசிய கொள்கை வட்டத்துக்குள் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- நிதி, தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான உதவிகளை வழங்குதல் மற்றும் மறுசீரமைப்பை அறிமுகப்படுத்தல்
- சர்வதேச தொடர்புகளைப் பேணிவருதல் மற்றும் வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- உள்ளூராட்சி நிறுவனங்களின் தாபிப்பு மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான தேசிய மட்டப் பொறுப்புக்கள்
- பயனுள்ள பன்முகப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டைக் கண்காணித்தல்
- பௌதிக, பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்.

4

# குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதான துறைகள்

**01. உள்ளூராட்சிக்கு அவசியமான தேசிய சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்றவாறு தயாரித்தல்**

- உள்ளூராட்சி தேர்தல் (திருத்த) சட்டம் மற்றும் உள்ளூராட்சி (விசேட விதிகள்) சட்ட திருத்தங்கள்
- மாநகர சபை கட்டளைச் சட்டம் திருத்தியமைத்தல்
- நகர சபை கட்டளைச் சட்டம் திருத்தியமைத்தல்
- பிரதேச சபை சட்டம் திருத்தியமைத்தல்
- உள்ளூராட்சி நிர்வாகம், ஆளணிக் கட்டுப்பாடு, வருமானம் தொடர்பான சட்டங்களைத் தயாரித்தல்
- பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் தொடர்பான சட்டங்களைத் தயாரித்தல்
- பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் தொடர்பான சட்டங்களைத் தயாரித்தல்

**02. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் நல்லாளுகைக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்**

- அறிவூட்டலும் பயிற்சி வழங்கலும்
- பதவியணியினர் தேவைகளை நிறைவேற்றுதல்
- சட்டங்களை வரைதல் மற்றும் அமுலாக்கல் ஆற்றலை மேம்படுத்துதல்
- உள்ளூராட்சி மறுசீரமைப்பினை அறிமுகப்படுத்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களை தரப்படுத்தல்

**03. உள்ளூராட்சி நிறுவனங்கிளன் சேவை வழங்கலை வினைத்திறனாக்குதல்.**

- கொள்கைகளை மறுசீரமைத்தல்
- கணனிமயப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் பொறிமுறையொன்றை உருவாக்குதல்
- கழிவு முகாமைத்துவம்
- மலசலக் கால்வாய் முறைமையினை முகாமைத்துவம் செய்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தேவையான வாகனங்கள், இயந்திர உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்

**04. மாகாண சபைகளுக்கான துணைச் சேவைகளை வழங்குதல்**

- மாகாண சபைகளுக்குத் தேவையான மீண்டெழும் செலவினங்களை விடுவித்தல்
- மாகாண சபைகளின் செலவினங்களைப் புலனாய்வு செய்தல்

**05. சமநிலையான பிரதேச அபிவிருத்தியினை ஏற்படுத்தல்**

- பிரதேச ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பிரதேச வீதிகள், சுகாதாரம், கல்வி, போன்ற துறைகளுக்காக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல்.
- சிறிய மற்றும் நடுத்தரளவான நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்
- உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களை கட்டியெழுப்புதல்

5

# மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கிலுள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்குரிய விடயங்கள்

- கிராமங்களிலுள்ள சனத்தொகை அடர்த்தியினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கிராமங்களில் நீர்ப்பாசனத் திட்டங்களை செயற்படுத்தல் (ப.இல. 67)
- வைத்தியசாலைகளிற்காக மையப்படுத்திய கழிவுநீர் வெளியேற்றலுக்கான முறைமையொன்றை பெற்றுக்கொடுத்தல் (ப.இல. 67)
- பிரதேசத்தின் கேந்திரமையங்களை இனங்காண்பதற்காக புதிய வீதிகளை அமைத்தல் (ப.இல. 97)
- விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய வீதிகளை கண்டறிந்து திருத்தயமைத்தல் (ப.இல. 97)
- வீதிகளைப் பேணுவதற்காக முகாமைத்துவ முறைமையொன்றை ஈடுபடுத்துதல் (ப.இல. 97)
- முக்கியமான முச்சந்திகளை இனங்கண்டு வாகன முகாமைத்துவ முறை மற்றும் நடைபாதை வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை செய்த்ல (ப.இல. 98)
- முச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிடங்களை வழங்குதல் (ப.இல. 106)
- புதிய நடைபாதைகளையும் துவிச்சக்கர வண்டிகளுக்குரிய பாதைகளையும் நிர்மாணித்தல் (ப.இல. 108)
- நகரசபை, மாநகரசபைகளின் கழிவு முகாமைத்துவ வசதிகளையும் நீர் வழங்கலையும் பெற்றுக்கொடுத்தல் (ப.இல. 163)
- பொது இடங்கள் மற்றும் சேவைகள் வழங்கல் இடங்களிற்கான நுழைவு வசதிகளை மேம்படுத்தி கண்காணித்தல் (ப.இல. 194)
- ஓய்வுநேர பூங்காக்கள் மற்றும் நடமாடும் நடைபாதைகளை அமைத்தல் (ப.இல. 194)
- மாகாணசபைகள் மற்றும் பிரதேச சபைகளில் மகளிர் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்தல் (ப.இல. 194)

* **மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கிலுள்ள பக்க இலக்கங்கள் அருகில் குறிப்பிடப்பட்டள்ளன.**

# 6

# உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு பிரிவுகளும் நியதிச்சட்ட நிறுவனங்களும்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிறுவனங்களின் தேவைகளுக்கு இசைவாக்கம் காட்டுவதை வசதியாக்கும் பொருட்டு அமைச்சில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளும் நிறுவனங்களும்

- கௌரவ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரின் அலுவலகம்
- கௌரவ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் பிரதி அமைச்சரின் அலுவலகம்
- அமைச்சின் செயலகம்
- நிர்வாகப் பிரிவு
- நிதிப் பிரிவு
- உள்ளூராட்சிப் பிரிவு
  * உள்ளூராட்சி மறுசீரமைப்புப் பிரிவு
  * உள்ளூராட்சி முறைப்பாடுகள் மற்றும் தகவல் பிரிவு
- மாகாண சபைகள் மற்றும் பயிற்சிப் பிரிவு
- அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு
  * குறை வருமானமுடைய உள்ளூராட்சி நிறுவனங்களை கட்டியெழுப்புதல் பிரிவு
  * செயற்பாட்டுப் பிரிவு
  * சிறிய மற்றும் நடுத்தரளவு நகர அபிவிருத்திப் பிரிவு
  * வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் ஒருங்கிணைத்தல் பிரிவு
  * நாட்டுக்கு மகுடம் அபிவிருத்திப் பிரிவு
  * ஊடக மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு
- கொள்கை மற்றும் சட்டப் பிரிவு
- தேசிய கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்
  * டெங்கு ஒழிப்புப் பிரிவு
- செலவின புலனாய்வுப் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம்
- உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் விடயப் பரப்பில் ஒன்றான தேசிய பயிற்சி நிறுவனமெனும் உள்ளூர் ஆளுகை நிறுவனம் இவ் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. மேலும் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்தின் முகாமைத்துவமும் அமைச்சின் கீழ் வரும் விசேட பணிகளில் ஒன்றாகும்.

# 7

# அமைச்சின் முக்கிய பணிகள்

அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்குமிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தல், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிறுவனங்களில் நல்லாளுகையை மேம்படுத்தல், வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் போன்றன.

**01. மாகாண சபைகளுக்கான பிரதான செயற்பாடுகள்**

- 9 மாகாண சபைகளுக்கும் 335 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான உதவிச் சேவைகளை வழங்குதல்.
- உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்களுக்கான நிறைவேற்று நிறுவனமாக செயற்படுதல்
- உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் மற்றும் இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவனம் போன்வற்றுக்கு வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்கல்
- தேசிய கழிவு முகாமைத்துவ உதவி நிலையத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு கழிவு முகாமைத்துவம் தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
- மாகாண சபைகளுக்கான நிதி ஏற்பாடுகளை விடுவித்தல் செலவுளை புலனாய்வு செய்தல்
- வெளிநாட்டு கடன் நிதியின் மூலம் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- கிழக்கு மற்றும் வட மாகாண நிர்வாக நடவடிக்கைகளை வலுவூட்டச் செய்தல்
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகர அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தல்

**02. உள்ளூராட்சிக்கான பிரதான செயற்பாடுகள்**

- உட்கட்டமைப்பு வசதிகள், மனித வள அபிவிருத்தி மற்றும் நல்லாளுகையை மேம்படுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உதவிபுரிதல்
- பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விசேட அபிவிருத்திக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்
- கழிவினை முகாமைத்துவ வேலைத்திட்டங்களை முறைப்படியாகவும் பலமுள்ளதாகவும் மேற்கொள்வதற்கு உதவுதல்
- உள்ளூராட்சி யாப்பை திருத்தியமைத்தல் மற்றும் மறுசீரமைத்தலுமான விடயங்களுக்கு உதவுதல்
- உள்ளூராட்சி நிறுவனங்களை தரப்படுத்தல் மற்றும் பதிய உள்ளூராட்சி நிறுவனங்களை தாபித்தல்
- கிராமிய வீதிகளை மேம்படுத்தல், அனர்த்த நிவாரண முகாமைத்துவம் தொடர்பான முனனேற்பாடுகளை செய்தலும் நிறுவன ரீதியான ஆற்றல்களை மேம்படுத்தலும்.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டமைப்புக்களை மறுசீரமைப்பதற்கு உதவுதல்
- ‘‘புறநெகும’’ வேலைத்திட்டத்தினை ஆரம்பித்தல், உள்ளூராட்சி அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வெற்றிகரமாக முடித்தல்
- கழிவு முகாமைத்துவப்படுத்தல் / மலசல கழிவு கால்வாய்களை நவீனப்படுத்தல்
- இயந்திரங்கள்/ கழிவு பவுசர், நீர் பவுசர் போன்ற வசதிகளை வழங்குதல்

# 8

# உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பரப்பினுள் அடைந்துள்ள வெற்றிகள்

- உள்ளூராட்சி தேர்தல் (திருத்தியமைத்தல்) சட்டம் மற்றும் உள்ளூராட்சி (விசேட விதிகள்) அடங்கிய சட்டத்தினை சட்டமாக்கல்
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தேர்தல் முறையில் எதிர்வரும் தேர்தல்களை நடாத்தவதற்காக பிரிவு எல்லைகள் நிர்ணயிப்பு தேசியக் குழு மற்றும் மாவட்டக் குழுவினை நிறுவுதல் மற்றும் அதன் பணிகளை ஆரம்பித்தல்
- மாகாண சபைகள் நியதிச்சட்டங்களை தயாரிப்பதற்காக இயலுமையினை அபிவிருத்தி செய்தல்.
- மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச்சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் போன்றவைகளை திருத்தியமைப்பதற்கு தேவையான அடிப்படை வரைவுகளைத் தயாரித்தல்
- ரூபா 10 மில்லியனுக்குக் குறைந்த வருமானமுள்ள 110 உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை உதவிகளை வழங்குதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- சகல மாகாணங்களிலும் பிரதேச இலக்குகளுடன் கூடிய வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு நூற்றாண்டு அபிவிருத்தி இலக்குகளிற்கு அப்பால் பயணிப்பதற்கு அம் மாகாணங்களில் அபிவிருத்தி செயற்திட்டங்களை ஆரம்பித்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவு நகர அபிவிருத்திக்காக 108 நகரங்கள் புறநெகும செயற்திட்டத்தை ஆரம்பித்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களினது கேந்திர முக்கியமான கிராமப்புற வீதிகளை இனங்கண்டு வீதிப் பதிவேடுகளைத் தயாரிப்பதன் மூலம் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு முதலீட்டுத் திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் அது தொடர்பில் அறிவுறுத்தல்
- கிழக்கு, வடமத்திய, சப்பரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வட மாகாணங்களில் உள்ள 1070 கி.மீ மாகாண வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு கடன் உதவிச் செயற்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துதல்.
- 2013 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களிற்காக டபள் கெப் வாகனங்கள், நாற்சக்கர டிரக்டர்கள், பெகோ இயந்திரங்கள், டிரக் மவுண்டட் தண்ணீர் பவுசர்கள், டிரக்டர் மவுண்டட் தண்ணீர் பவுசர்கள், ரிப்பர் வாகனங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் அதற்கும் மேலாக கொழும்பு மாநகர சபைக்காக கழி பவுசர், ஊழியர் போக்குவரத்து டிரக் வாகனங்கள் மற்றும் நடமாடும் பார ஊர்திகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- சகல உள்ளூராட்சி நிறுவன அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவு முகாமைத்துவத்தினை முன்னுரிமைத் தேவையென இனங்கண்டு உள்ளூராட்சி நிறுவனங்களின் தேவைக்கேற்ப செயற்படுத்தக்கூடிய வேலைத்திட்டமொன்று தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- டெங்கு ஒழிப்பினை தேசிய தேவையொன்றாகக் கருதி அதற்காக செயற்படுவதற்கு அமைச்சின் கீழ் டெங்கு ஒழிப்பு பிரிவொன்றை தாபித்தல்
- உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அவசியமான பயிற்சி பாடநெறிகளை நடாத்துதல்

- உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் முகாமைத்துவ போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் உள்ளூராட்சி பற்றிய மாநாடுகளை நடாத்துவதன் மூலம் உள்ளூராட்சி சேவையில் செயற்திறனை மேம்படுத்தல்
- 2013 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டங்களின் கீழ் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை ஆகிய மாவட்டத்திலுள்ள 16 உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- 2013 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் 7 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டமை.
- தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்திட்டங்கள் மற்றும் இடைக்கால யாப்புகள் போன்ற சட்டரீதியான ஏற்பாடுகளை நடைமுறைக்கேற்ற விதத்தில் தயாரித்து மேம்படுத்துவதற்காக தேசிய மட்டத்தில் வழங்கப்பட முடியுமான உதவிகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக இந்த அமைச்சு முன்னுரிமையுடன் செயற்பட்டுள்ளது.

# 9

# செயலாற்றுகை - 2013

## 9.1 உள்ளூராட்சிப் பிரிவு

### 9.1.1 குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களை கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டம்

இந்த ஆண்டில் 5 மாகாணங்களிலுள்ள குறைந்த வருமானம் கொண்ட 19 உள்ளூராட்சி நிறுவனங்களை தெரிவுசெய்யப்பட்டு உரிய விதத்தில் மக்களிற்கு சேவைகளை வழங்குவதற்காக அந்நிறுவனங்களிற்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தல், உபகரணங்களை வழங்குதல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளைச் செயற்படுத்துவதற்காக ரூபா 40 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2013.12.31 இல் உள்ளவாறு ரூபா 37.47 மில்லியன் செலவிடப்பட்டு குறித்துரைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| தொடர் இல. | செயற்திட்டம் | உள்ளூராட்சி நிறுவனம் | ஈடுபடுத்திய தொகை (ரூபா மில்) |
|---|---|---|---|
| 1 | அலுவலக உபகரணங்களையும் தளாபடங்களையும் கொள்வனவு செய்தல் | கலென்பிதுனுவெவ பி.ச, ஹொரவபொதான பி.ச, வீரகெடிய பி.ச., ஹம்பந்தோட்டை மா.ந.ச, மீகஹகிவுல பி.ச, அக்கரைபற்று மா.ந.ச | 9.27 |
| 2 | கட்டிடங்களை மேம்படுத்தல் | மெதிரிகிரிய பி.ச., படல்கும்புர பி.ச., மடுல்ல பி.ச, பொல்பிதிகம பி.ச., நிந்தவூர் பி.ச, அக்கரைபற்று பி.ச | 24.67 |
| 3 | பாலர் பாடசாலைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல். | பண்டுவஸநுவர பி.ச., உடுபத்தாவ பி.ச., இப்பாகமுவ பி.ச., | 1.66 |
| 4 | நீர் தாங்கிகள், வீதி விளக்குகள் போன்ற பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் | நாஉல பி.ச., மஹியங்கனை பி.ச., கம்பஹா பி.ச. | 1.87 |
| **ஈடுபடுத்தி தொகை** | | | **37.47** |
| **நிதிசார் செயன்முன்னேற்றம்** | | | **94%** |

**9.1.2 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை திருத்துதல்**

ிகவும் பயனுள்ள மக்கள் சேவைகளை வினைத்திறனாக வழங்கும் நோக்குடன் 05 மாகாணங்களிலுள்ள 17 உள்ளூராட்சி நிறவனங்களில் காணப்படுகின்ற 10 வருடங்களிற்கும் மேல் பழமைவாய்ந்த மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட 17 டபல்கெப் வாகனங்களை திருத்தவதற்காக 2013ம ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 20 மில்லியனாக காணப்பட்டதுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 13.6 மில்லியனாகும்.


| **தொடர் இல.** | **உள்ளூராட்சி நிறுவனம்** | **ஈடுபடுத்திய தொகை (ரூபா மில்)** |
|---|---|---|
| 01 | ராஜாங்கனை பிரதேச சபை | 0.45 |
| 02 | நொச்சியாகம பிரதேச சபை | 0.27 |
| 03 | வாரியபொல பிரதேச சபை | 0.27 |
| 04 | பன்னல பிரதேச சபை | 0.89 |
| 05 | ரிதீகம பிரதேச சபை | 1.58 |
| 06 | பொலகஹவல பிரதேச சபை | 1.13 |
| 07 | மஹவ பிரதேச சபை | 0.67 |
| 08 | பதவி ஸ்ரீ புர பிரதேச சபை | 0.23 |
| 09 | யடவத்த பிரதேச சபை | 0.65 |
| 10 | மெததும்பர பிரதேச சபை | 0.94 |
| 11 | பன்வில பிரதேச சபை | 1.12 |
| 12 | உட பலாத பிரதேச சபை | 0.56 |
| 13 | அம்பாந்தோட்டை மாநகர சபை | 1.02 |
| 14 | கடுவன பிரதேச சபை | 1.50 |
| 15 | நாகொட பிரதேச சபை | 0.85 |
| 16 | திஹகொட பிரதேச சபை | 0.80 |
| 17 | கொடபொலபிரதேச சபை | 0.67 |
| **ஈடுபடுத்திய தொகை** | | **13.60** |
| **நிதிசார் செயன்முன்னேற்றம்** | | **68%** |

9.1.1 இல் குறிப்பிட்டவாறு பின்தங்கிய உள்ளுராட்சி நிறுவனங்களை கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண அடிப்படையில் பின்தங்கிய உள்ளுராட்சி நிறுவனங்களிற்காக ஈடுபடுத்தப்பட்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதத்தினை கீழே தரப்பட்டுள்ள அட்டவணைகளிலும் வரைபடங்களிலும் காட்டப்பட்டுள்ளன.

**பின்தங்கிய உள்ளுராட்சி நிறுவனங்களிற்காக மாகாண அடிப்படையில் நிதியினை ஈடுபடுத்தல்**

| | | |
|---|---|---|
| 1 | வட மத்திய | 1,843,432 |
| 2 | தெற்கு | 5,460,005 |
| 3 | மத்திய | 350,000 |
| 4 | ஊவா | 4,942,232 |
| 5 | கிழக்கு | 19,747,300 |
| 6 | வடமேல் | 3,592,491 |
| 7 | மேற்கு | 1,513,000 |
| | மொத்தம் | **37,448,460** |

**அட்டவணை இல. 01**





**வரைபட இல. 01**

9.1.2 இல் குறிப்பிடப்பட்டவாறு உள்ளுராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களைத் திருத்துவதற்காக மாகாண அடிப்படையில் நிதி பகிரப்பட்டுள்ள விதம் அட்டவைை 02 இலும் வரைபடம் 02 இலும் கீழே உள்ளவாறு காட்டப்பட்டுள்ளன.

**உள்ளுராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களைத் திருத்துவதற்காக மாகாண அடிப்படையில் நிதி ஈடுபடுத்தப்படல்**

| | | |
|---|---|---|
| 1 | வட மத்திய | 725,575 |
| 2 | வடமேல் | 4,545,6 00 |
| 3 | கிழக்கு | 230,100 |
| 4 | மத்திய | 3,272,829 |
| 5 | தெற்கு | 4,828,372 |
| மொத்தம் | | **13,602,476** |

**அட்டவணை இல. 02**




**வரைபட இல. 02**

## 9.1.3 உள்ளூராட்சி வாரம்

இலங்கையில் உள்ளூராட்சி மன்ற முறைமையினுள் அந்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் மக்கள் பயன்பாட்டு சேவையின் மேம்பாட்டுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அந்த நிறுவனங்களில் மானிட மற்றும் பௌதிக வளங்களை பயன்படுதி மக்களுக்கு உயர்மட்ட சேவையினை வழங்குதற்குத் தேவையான பின்னணியினை உருவாக்கல் மற்றும் உள்ளூராட்சி தொடர்பிலும் பொது மக்கள் சேவைகள் தொடர்பிலும் தொடர்பிலும் பொது மக்களுக்கிடையில் சிறந்த மனப்பாங்கொன்றையும் தொடர்பொன்றையும் கட்டிடயெழுப்புதல் போன்றன உள்ளூராட்சி வாரம் ஒன்றை நடாத்தலின் நோக்கமாகும். இன்படி, இவ்வருடமும் அமைச்சின் உத்தியோகத்தர்களால் மாகாண அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளூராட்சி வாரத்தினுள் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

## 9.1.4 உள்ளூராட்சி முகாமைத்துவ போட்டியையும் தேசிய உள்ளூராட்சி மாநாட்டையும் நடாத்துதல்

இவ் அமைச்சின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் நல்லாளுகையினையும் முகாமைத்துவ செயற்திறனையும் மேம்படுத்தும் நோக்கில், தேசிய மட்டத்தில் உள்ளூராட்சி முகாமைத்துவ போட்டியை நடாத்தி அதில் வெற்றிபெறும் மன்றங்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்குதல், அவ்வாறு வெற்றியீட்டிய சபைகளை தேசிய மட்டத்தில் மதிப்பீடு செய்து பாராட்டும் பொருட்டு சகல உள்ளூராட்சி மன்ற தலைவர்களினதும் பங்குபற்றலுடன் உள்ளூராட்சி தொடர்பான தேசிய மாநாடு அதிமேதகு சனாதிபதி அவர்களின் பங்குபற்றலுடன் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2013 சனவரி 08 ஆந் திகதி அரலி மாளிகையில் நடாத்தப்பட்டது.







அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2013 சனவரி 08 ஆந் திகதி அரலி மாளிகையில் நடாத்தப்பட்ட உள்ளூராட்சி தொடர்பான தேசிய பொது மாநாட்டில் வெற்றிபெற்ற உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு பரிசளிப்பு வைபவத்தின் சந்தர்ப்பங்கள்.

## 9.2 மாகாண சபைகள் மற்றும் பயிற்சிகள் பிரிவு

மாகாண சபைகளின் செயற்பாடுகளிற்கு வசதியளித்தல், மாகாண சபைகளிற்கும் மத்திய அரசாங்கத்திற்குமிடையில் ஒருங்கிணைப்பு மற்றும் மனித வள அபிவிருத்தி போன்ற பணிகள் இப்பிரிவினால் முக்கியமாக நிறைவேற்றப்படுகின்றன. இவ்வாண்டில் சகல மாகாண சபைகளினதும் பிரதான செயலாளர்களின் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டு பிரதான செயலாளர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளிற்கு, தொடர்புடைய தரப்பினர்கள் வரவழைக்கப்பட்டு தேவையான தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாகாண அரசாங்க சேவையிலுள்ள நாடு தளுவிய ரீதியிலான வெற்றிடங்களை நிரப்புவதற்காக அச்சேவைகளிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பிலான பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு தேவையான அங்கீகாரங்களை வழங்குவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனத்தைத் தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**2012.12.31 இல் உள்ளவாறு இந்த அமைச்சின் செயற்பாடுகளின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்**

| தொடர் இல. | செயற்பாடுகள் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா மில்.) | உள்ளபடியான செலவினம் (ரூபா மில்.) | பௌதிக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 1 | மனித வள அபிவிருத்திக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தல் | 1.25 | 1.25 | உள்நாட்டுப் பயிற்சிகளுக்காக 179 பேரும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக 63 பேரும் அனுப்பி வைக்கப்பட்டனர் | நிதிசார் முன்னேற்றம் 100% |
| 2 | மாகாண சபைகளுக்காக வாகனங்களைக் கொள்வனவு செய்தல் | | | 12 கோரிக்கைகள் சிபார்சு செய்யப்பட்டு திறைரேியின் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | பௌதீக முன்னேற்றம் 100% |
| 3 | அதிகாரிகளுக்கு வரப்பிரசாதங்கள் மற்றும் வசதிகளை வழங்குதல் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் | - | - | அதிகாரிகளுக்கு 364 வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்கியமை | பௌதீக முன்னேற்றம் 100% |
| 4 | தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழுவினால் இந்த அமைச்சிற்கு அனுப்பப்படுகின்ற சேவைப் பிரமாணக் குறிப்புகளை மாகாண அரசாங்க சேவைக்குப் பொருத்தமான விதத்தில் தயாரித்தல் | - | - | 11 பதவிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 5 பதவிகளுக்குரிய சேவை பிரமாணக் குறிப்புகளுக்காக தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு பிரதான செயலாளர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை | பௌதீக முன்னேற்றம் 45% |

## 9.3 சட்டப் பிரிவு

ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய கொள்கைக் கட்டடைப்பிற்குள் மக்கள் சேமநலனை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்தினாகவும் நிறைவேற்றவதற்காக 13 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களால் செயற்படுத்தப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளிற்குத் தேவையான ஒருங்கிணைப்பு, வழிகாட்டல், சட்டரீதியான, தொழில்நுட்ப ரீதியான மற்றும் நிதிசார் உதவிகள் வழங்குவதனை நோக்காகக் கொண்டு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் சட்டரீதியான பணிப்பொறுப்புக்களை மிகவும் பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்தவதற்காக அமைச்சின் சட்டப்பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

### 9.3.1 பணிப்பொறுப்புக்கள்

01. உப தேசிய கட்டுப்பாட்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களிற்கு இடையே ஒருங்கிணைப்பை பேணி வருகையில் எழுகின்ற சட்டரீதியான பிரச்சினைகள் தொடர்பில் மத்தியஸ்தம் வகித்தல், அதன்போது காணப்படுகின்ற சட்டங்கள், உப சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைத் தேவைக்கேற்ப புதிய சட்டங்கள் மற்றும் உப சட்டங்களை வகுப்பதற்கு தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

02. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பரப்பில் எழுகின்ற சட்டரீதியான பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குதல்.

03. அமைச்சிற்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை பேணி வருதல்.

04. கீழ்மட்ட நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்குகொள்ளல் மற்றும் அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தல்

05. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தொடரப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள்

### 9.3.2 சட்டப் பிரிவின் 2013 ஆம் ஆண்டிற்கான செயன்முன்னேற்றம்

மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தினை திருத்தம் செய்யும் இறுதி வரைவுகள் சட்டமா அதிபரின் அவதானிப்புக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவற்றை உள்ளடக்குவதற்காக சட்ட வரைவுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவ்வாறே அழுத்தச் செயல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பொது மயானங்கள், தனியார் மயானங்கள் கட்டளைச் சட்டம் போன்றவற்றை திருத்தும் இறுதி வரைவுகள் சட்டமா அதிபருக்குச் சமர்ப்பித்தலும் இவ்வாண்டில் இடம்பெற்றன.

## 9.4 அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு

நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் பிரதேச அபிவிருத்தி ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்துதல் இவ்வமைச்சின் பிரதான கருமமாகும். அதன்போது அபிவிருத்திக் கருமங்களை ஒருங்கிணைத்தல், அது தொடர்பான செயன்முன்னேற்றத்தை மீளாய்தல், தேசிய மட்டத்தில் கலந்துரையாடல்களை நடாத்தல், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பரப்பின் கருமங்களிற்குரிய அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டம், செயலாற்றல் அறிக்கை அடங்கலான செயன்முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றை சமர்ப்பித்தல் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான செயற்பாடுகளாகும்.

**9.4.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான நூலகங்களை அபிவிருத்தி செய்தல்**

நாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான குறைந்த வசதிகளுடன் கூடிய பொது நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு இவ்வமைச்சிற்கான பாதீட்டின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்தது. காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டைக் கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் குறைந்த வசதிகளுடன் கூடியதும் கட்டாயமாக முன்னேற்றப்பட வேண்டியதுமான ஒரு உள்ளூராட்சி நிறுவனம் வீதம் உள்ளூராட்சி ஆணையாளரின் சிபார்சுடன் ஒரு மாகாணத்திருந்து தெரிவு செய்யப்பட்டு அந் நூலகத்திற்காக புத்தகங்களையும், அலுவலக தளபாடங்களையும், உபகரணங்களையும் வழங்குதல் மற்றும் நூலகத்தின் திருத்தங்களை மேற்கொள்ளல் போன்ற அத்தியாவசியப் பணிகள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. இந் நிகழ்ச்சித்திட்டம் கீழே குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதுடன் கிராமிய மட்டத்தில் மிகவும் குறைந்த வசதிகளுடன் கூடிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளினதும் வாசகர்களினதும் அறிவு ஆற்றலை வளர்தெடுப்பதற்கான அடிப்படை வசதிகளை வழங்குதல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

2013 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட பொது நூலகங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இல. | உள்ளூராட்சி நிறுவனம் | அபிவிருத்திப் பணிகள் |
|---|---|---|
| 1 | வீகெடிய பிரதேச சபை | புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூலகங்களிற்காக அலுமாரிகள், மேசைகள், நாற்காலிகள், இராக்கைகள் போன்வற்றை வழங்குதல். |
| 2 | வெலிகெபொல பிரதேச சபை | பொது நூலகத்திற்காக நூலகத் தளபாடங்கள், கணனிகள் மற்றும் புத்தகங்களை வழங்குதல். |
| 3 | உடுநுவர பிரதேச சபை | கெலிஓய பொது நூலகத்திற்காக கணனிகள், கணனி அச்சியந்திரம், கையழுத்தி, கடதாசி வெட்டும் கருவி, நாற்காலிகள், புத்தகங்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும் உபகரணங்களையும் புத்தக இராக்கைகளையும் வழங்குதல். |
| 4 | புத்தளம் பிரதேச சபை | வெலுசுமன பொது நூலகத்திற்கான கட்டிடத் திருத்தம், கணனிகள், நிழற்பட பிரதி இயந்திரம் மற்றும் புத்தகங்களை வழங்குதல். |
| 5 | ஹொரவபொத்தானை பிரதேச சபை | பொது நூலகத்திற்காக புத்தகங்களை வழங்குதல். |
| 6 | படல்கும்புர பிரதேச சபை | பொது நூலகத்திற்காக மேசைகள், புத்தக இராக்கைகள், பிளாத்திக்குப் பெயர்ப் பலகை, கணனிகள் மற்றும் புத்தகங்களை வழங்குதல். |
| 7 | பாலிந்தநுவர பிரதேச சபை | பொது நூலகத்திற்காக புத்தக இராக்கைகள் மற்றும் புத்தகங்களை வழங்குதல். |
| 8 | திருக்கோவில் பிரதேச சபை | தம்புலுவில் 02, பொது நூலகத்திற்காக மேசைகள், நாற்காலிகள், புத்தக அலுமாரிகள் மற்றும் கடந்த கால வினாப் பத்திரங்களை வழங்குதல். |
| 9 | வல்வெட்டித்துறை பிரதேச சபை | நரந்தனாய் புதிய நூலகத்திற்காக புத்தக அலுமாரிகள், மேசைகள், நாற்காலிகள் மற்றும் புத்தகங்களை வழங்குதல். |
| **ஈடுபடுத்திய தொகை** | | *** ரூபா 0.39 மில்லியன்** |
| **நிதிசார் செயன்முன்னேற்றம்** | | **8%** |
| **பௌதீக செயன்முன்னேற்றம்** | | **100%** |

* பௌதீக செயன்முன்னேற்றம் 100% ஆன இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் எஞ்சிய தொகை 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்படவுள்ளது.

## 9.4.2 தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் - 2013

இவ்வமைச்சின் தலைமையில் மற்றும் செயற்படுத்தலில் சகல மாாகண சபைகளையும் பிரதிநிதித்துவம் செய்து 2013 மார்ச் 23 ஆந் திகதி முதல் ஏப்ரல் 01 ஆந் திகதி வரை அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக்கு மாகாண சபைகள் அணியாக இந்த அமைச்சு வெற்றிகரமாக பங்குபற்றியது. 2013 இன் தேசத்திற்கு மகுடம் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 16 உள்ளூராட்சி மன்றங்களில் பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 100 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டது. அதன் படி 2013 ஆம் ஆண்டிற்குரிய நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளன.

இதற்கான மொத்தச் செலவினம் ரூபா 99.92 மில்லியனாகும். அத்தொகையில் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இல. | செயற்திட்டம் | 2013 ஆண்டில் செலுத்தியது ரூபா மில். | பௌதீக செயன் முன்னேற்றம் % |
|---|---|---|---|
| 1 | இபலோகம பிரதேச சபை அலுவலக கட்டிடத்தின் கீழ் மாடியினை நிர்மாணித்தல் | 2.56 | 100% |
| 2 | ஒயாமடுவ பிரதேச சபை அலுவலகக் கட்டிடத்தினை திறப்பதற்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்தல். | 1.00 | 100% |
| 3 | அநுராதபுரம் சுற்றுலா விடுதியினை திருத்தியமைத்தல் | 8.70 | 100% |
| 4 | கஹடகஸ்திகிலிய பிரதேச சபை கோட்போர் கூட்த்தை நிர்மாணித்தல் | 3.65 | 100% |
| 5 | கிழக்கு நுவரகம் பளாத பிரதேச சபை அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 1.98 | 100% |
| 6 | மத்திய நுவரகம் பளாத பிரதேச சபையின் விலச்சிய வாராந்தச் சந்தையினை முன்னேற்றுதல் | 0.31 | 100% |
| 7 | பெரியகுளம் சனசமூக நிலையத்தின் எஞ்சிய வேலைகளை பூரணப்படுத்தல் | 0.38 | 100% |
| 8 | ஹொரவபொத்தானை பிரதேச சபையின் கீழ் மாடியினை நிர்மாணித்தல் | 1.65 | 100% |
| 9 | கெகிராவ பிரதேச சபையின் பொதுச் சந்தை மற்றும் வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் | 3.49 | 100% |
| 10 | கஹடகஸ்திகிலிய பேரூந்து தரிப்பிடத்தை நிர்மாணித்தல் | 4.84 | 100% |
| 11 | தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடவடிக்கைகளிற்காக | 14.00 | 100% |
| 12 | பிரதேச சபைகளில் பொது வசதிகளை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 2.24 | 100% |
| 13 | இராஜங்கனை பிரதேச சபையின் நூலகக் கட்டிட நிர்மாணம் | 0.43 | 100% |

| | | | |
|---|---|---|---|
| 14 | மிஹிந்தலை பிரதேச சபையின் கட்டிட நிர்மாணம் | 2.14 | 100% |
| 15 | கெபிதிகொல்லேவ பிரதேச சபையின் கட்டிடத் நிர்மாணம் | 3.94 | 100% |
| 16 | குடா நெலும்பேவ சுகாதார நிலையத்திற்காக பொருட்களைக் கொள்வனவு செய்தல் | 1.62 | 100% |
| 17 | கஹடகஸ்திகிலிய பிரதேச சபையின் கேட்போர் கூட நிர்மாணம் | 1.21 | 100% |
| 18 | நொச்சியாகம பிரதேச சபையின் நூலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 1.14 | 100% |
| 19 | ரம்பேவ பிரதேச சபையின் உணவக கட்டிடத்தை நிர்மாணித்தல் | 0.88 | 100% |
| 20 | மஹபுலங்களம் விவிசாய விற்பனை நிலையத்தின் களஞ்சிய தொகுதியை நிர்மாணித்தல் | 1.96 | 100% |
| 21 | நாச்சிதூவ குடா நெலும்பேவ சிகிச்சை நிலையத்தின் நுழைவாயிலை நிர்மாணித்தல் | 0.73 | 100% |
| 22 | குடா நெலுவெவ துருலிய செவன பொருளாதார மத்திய நிலையத்தின் வேளி மற்றும் பாதுகாப்புக் கூடத்தை நிர்மாணித்தல் | 1.54 | 100% |
| 23 | கலன்பிதுனுவெவ தண்ணீர் செயற்திட்டத்திற்காக நீர் வழங்கல் தொகுதிகளைக் கொள்வனவு செய்தல் | 3.45 | 100% |
| 24 | கெகிராவ பிரதேச சபையின் பொதுச் சந்தையினை நிர்மாணித்தலும் வாகன தரிப்பிடத்தை நிர்மாணித்தலும் | 1.08 | 100% |
| 25 | இராஜங்கனை பிரதேச சபையின் கட்டிடத்தின் முதலாம் மாடியினை நிர்மாணித்தல் | 0.77 | 100% |
| 26 | ஏராவூர் நகர சபையின் வெள்ளத் தடுப்புச் செயற்திட்டத்திற்காக | 4.92 | நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது |
| 27 | தமன பிரதேச சபையின் சுற்றுலா விடுதியினை நிர்மாணித்தல் | 1.44 | நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது |
| 28 | ஈச்சலம்பத்து பிரதேச சபையின் சிறுவர் பூங்காவினை நிர்மாணித்தல் | 2.95 | நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது |
| 29 | தமன பிரதேச சபைக்கான பொது வசதிகளை வழங்குதல் | 0.42 | 100% |
| 30 | உகன பிரதேச சபையின் வேலைத்திட்டங்களிற்காக | 1.29 | 100% |
| 31 | அம்பாறை நகர சபையின் வாகனங்களை திருத்தும் நடவடிக்கைகளிற்காக | 0.66 | 100% |
| 32 | செங்கலடி நூலகத்தின் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 0.90 | 100% |
| 33 | ரம்பேவ பிரதேச சபையின் அலுவலகக் கட்டிட நிர்மாணம் | 4.11 | 100% |
| 34 | மத்திய நுவரகம் பளாத பிரதேச சபையின் அலுவலகக் கட்டிட நிர்மாணம் | 3.82 | 100% |

| | | | |
|---|---|---|---|
| 35 | ஹொரவபொதான பிரதேச சபையின் அலுவலகக் கட்டிட நிர்மாணம் | 1.48 | 100% |
| 36 | திரிப்பனே பிரதேச சபையின் அலுவலகக் கட்டிட நிர்மாணம் | 1.79 | 100% |
| 37 | கல்னேவ பிரதேச சபையின் அலுவலகக் கட்டிட நிர்மாணம் | 1.99 | 100% |
| 38 | ரம்பேவ பிரதேச சபையின் கம்பி வேளி மற்றும் முன்பக்க கேர்ட்டினை நிர்மாணித்தல் | 0.36 | 100% |
| 39 | நாமல்லூய பிரதேச சபையின் கலாச்சார நிலையத்தினை நிர்மாணித்தல் | 5.17 | நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது |
| 40 | காரைதீவு பிரதேச சபையின் பொது நூலகத்தை நிர்மாணித்தல் | 1.04 | நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது |
| 41 | மதவச்சிய பிரதேச சபையின் அலுவலகக் கட்டிட நிர்மாணம் | 1.49 | 100% |
| 42 | அம்பாறை நகர சபையின் வாகனங்களை திருத்துதல் | 0.40 | 100% |
| | மொத்தம் | **99.92** | |

**நாட்டுக்கு மகுடம் மொத்த ஏற்பாடு (ரூபா மில்லியன்) - 100.00**

**மொத்தச் செலவினம் - 99.92**

**மொத்த நிதிசார் செயன்முன்னேற்றம் - 99.92%**

## 2013 நாட்டுக்கு மகுடத்துடன் இணைந்த செயற்பாட்டுச் சந்தர்ப்பங்கள்



நாட்டுக்கு மகுடம் நடமாடும் சேவையில் நடமாடும் கொட்டில்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்



நாட்டுக்கு மகுடம் வாரத்தினுள் கல்கமுவ பி.ச. கிராமிய வீதிகளை செப்பனிடல் சந்தர்ப்பங்கள்



நாட்டுக்கு மகுடத்துடன் இணைந்ததாக மஹஓய பிரதேச சபை கட்டிடத்தினை திறந்து வைத்தல்

## 9.4.3 சிறிய மற்றும் நடுத்தரளவ நகர அபிவிருத்தி

நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணிகள் நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் /கூட்டுத்தாபனம் மற்றும்கட்டிடத் திணைக்கம் போன்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை உதவியுடன் மாகாண சபைகளில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தினதும் உள்ளுராட்சி ஆணையாளர் அலவலகத்தினதும் பங்குபற்றலுடன் பின்வரும் சிறிய மற்றும் நடுத்தரளவு நகர அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் இவ்வமைச்சின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சிறப்பான புதிய பணியாகும்.

| நகரம் | 2013 இல் செயற்படுத்தப்படும் செயற்திட்டம் | 2013 பௌதீக முன்னேற்றம் % | 2013 நிதி முன்னேறற்ம் |
|---|---|---|---|
| **ஹக்மன நகர அபிவிருத்தி (2008 – 2013)** **ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 406.00<br>மொத்தச் செலவினம் 302.99<br>மொத்த நிதி முன்னேற்றம் 75% | ➢ தகனச்சாலையை புனரமைத்தல்<br>➢ நகர மண்டப நிர்மாணம்<br>➢ நூலக உபகரணங்களை கொள்வனவு செய்தல்<br>➢ வர்த்தக நிலைய வசதிகளை மேம்படுத்தல்<br>நகர நுழைவுப் பாதையை புனரமைத்தல் | 100<br>100<br>100<br>100<br>100 | தேறிய ஏற்பாடு ரூபா 40 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 39.99 மில்.<br>நிதி முன்னேற்றம் 100% |
| **தெஹிஓவிட நகர அபிவிருத்தி**<br>**(2010 – 2014)** **ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 250.00<br>மொத்தச் செலவினம் 204.86<br>மொத்த நிதி முன்னேற்றம் 82% | ➢ பல்தேவை கட்டிட நிர்மாணம் | 85 | தேறிய ஏற்பாடு ரூபா 35 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 27.86 மில்.<br>நிதி முன்னேற்றம் 80% |
| **பல்லேவல நகர அபிவிருத்தி**<br>**(2010 – 2016)** **ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 350.00<br>மொத்தச் செலவினம் 24.84<br>மொத்த நிதி முன்னேற்றம் 7% | ➢ பல்தேவை கட்டிட நிர்மாணம் | 25 | தேறிய ஏற்பாடு ரூபா 20 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 5.84 மில்.<br>நிதி முன்னேற்றம் 29% |

| | | | |
|---|---|---|---|
| **பண்டுவஸநுவர நகர அபிவிருத்தி**<br><br>**(2011 – 2016)** **ரூபா (மில்)**<br><br>செயற்திட்டக் கிரயம் 250.00<br><br>மொத்தச் செலவினம் 102.13<br><br>மொத்த நிதி முன்னேற்றம் 41% | எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக ம.ம.வித்தியாலய கட்டிட நிர்மாணம்<br><br>➢ புதிய நிர்வாக கட்டிடத்தை பூரணப்படுத்தல்<br><br>➢ தகனச்சாலையினை நிர்மாணித்தல்<br><br>➢ பேரூந்து தரிப்பிட நிர்மாணம் | 100<br><br>40<br><br>87<br><br>60 | தேறிய ஏற்பாடு ரூபா 70 மில்.<br><br>உள்ளபடியான செலவினம் ரூபா 69.13 மில்.<br><br>நிதி முன்னேற்றம் 29% |
| **பெலியத்த நகர அபிவிருத்தி**<br><br>**(2011 – 2016)** **ரூபா (மில்)**<br><br>செயற்திட்டக் கிரயம் 300.00<br><br>மொத்தச் செலவினம் 46.73<br><br>மொத்த நிதி முன்னேற்றம் 16% | ➢ சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல்<br><br>➢ வாகன தரிப்பிட நிர்மாணம்<br><br>➢ நகர வசதிகள் வழங்கல் நிலையத்தினை நிர்மாணித்தல் | ஆரம்ப கட்டம் | தேறிய ஏற்பாடு ரூபா 50.00 மில்.<br><br>உள்ளபடியான செலவினம் ரூபா 5.73 மில்.<br><br>நிதி முன்னேற்றம் 11% |
| **ஹொரண நகர அபிவிருத்தி**<br><br>**(2010 – 2016)** **ரூபா (மில்)**<br><br>செயற்திட்டக் கிரயம் 300.00<br><br>மொத்தச் செலவினம் 36.93<br><br>மொத்த நிதி முன்னேற்றம் 12% | ➢ நூலகத்தை நவீனப்படுத்தல்<br><br>➢ பழைய நீதிமன்றக் கட்டிடத்தை புதுப்பித்து முழுமையான நகர சபை அலுவலகத்தை அங்கு தாபித்தல்<br><br>➢ நகர மண்டபத்திற்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்<br><br>➢ பொதுச் சந்தையினை நிர்மாணித்தல் | 100<br><br>100<br><br>100<br><br>- | தேறிய ஏற்பாடு ரூபா 25.00 மில்.<br><br>உள்ளபடியான செலவினம் ரூபா 24.93 மில்.<br><br>நிதி முன்னேற்றம் 100% |
| **அக்கரைப்பற்று நகர அபிவிருத்தி**<br><br>**(2011 -2016)** **ரூபா (மில்)**<br><br>செயற்திட்டக் கிரயம் 300.00<br><br>மொத்தச் செலவினம் 227.79<br><br>நிதிசார் முன்னேற்றம் 76% | ➢ பொதுச் சந்தை நிர்மாணம்<br><br>➢ மாநகர சபை கட்டிட நிர்மாணம்<br><br>➢ பிரதேச சபை நிர்மாணம் | 75<br><br>75<br><br>95 | தேறிய ஏற்பாடு ரூபா 86.29 மில்.<br><br>உள்ளபடியான செலவினம் ரூபா 84.79 மில்.<br><br>நிதி முன்னேற்றம் 98% |

**சிறிய நடுத்தரளவு நகர அபிவிருத்தியின் கீழ் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட சில அபிவிருத்தி செயற்திட்டச் சந்தர்ப்பங்கள்**

## ஹக்மன நகர அபிவிருத்தி


நகர மண்டபம்


விளையாட்டரங்கு


உள்ளக வீதிகளை செப்பணிடல்

## ஹொரண நகர அபிவிருத்தி


நகர சபைக் கட்டிடம்


நூலகம்

## அக்கரைப்பற்று நகர அபிவிருத்தி


மாநகர சபை கட்டிடத் தொகுதி


பொதுச் சந்தை

## தெஹிஓவிட நகர அபிவிருத்தி


பல்தேவை கட்டிடத் தொகுதி

## 9.5 கழிவு முகாமைத்துவம்

**தூரநோக்கு**

அனைவருக்கும் மிக ஆரோக்கியமான சுற்றாடல்

**குறிக்கோள்**

உள்ளூராட்சி அதிகாரப்பிரிவில் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்

**கொள்கைகளும் உத்திகளும்**

**1. கழிவுகள் உருவாகுவதனைக் குறைத்தல்**

வீட்டு, வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளில் கழிவு உருவாக்கலைக் குறைப்பதற்காக தொடர்புடைய தரப்பினர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பல்வேறு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**2. வள மீள்உற்பத்தியினை உச்சப்படுத்தல்**

- கழிவுகள் சேரும் இடங்களிலேயே வகைப்படுத்தல்.
- உக்கிப்போகும் கழிவுகளிலிருந்து வீடுகளிலேயே சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு வீட்டுமையாளர்களை ஈடுபடுத்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் நகரத்தை மையமாகக் கொண்டு சேதனப் பசளை நிலையங்களை தோற்றுவித்தல்
- கழிவுகள் மீள் சுழற்சி முறையினை அறிமுகப்படுத்தலும் மக்களை ஊக்கப்படுத்தலும்

**3. சுத்தமான நில நிரப்புதலை அறிமுகப்படுத்தல்**

**9.5.1 கழிவு முகாமைத்துவ உதவி நிலையத்தின் உள்ளீடுகளின் 2013.12.31 இல் உள்ளவாறான நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம்**

| செயற்திட்டம் | செயற்திட்ட அதிகார பிரதேசம் | உள்ளபடியான செலவினம் ரூபா மில். | நிதிசார் முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| வீட்டு சேதனப் பசளை பீப்பாய்ச் செயற்திட்டம் | கொபெய்கனே பி.ச. | 0.10 | 100% | 100% |
| | குண்டசாலை பி.ச. | 0.07 | 100% | 100% |
| | ரத்தொட பி.ச. | 0.17 | 100% | 100% |
| | கண்டி பி.ச. | 0.45 | 100% | 100% |
| | ஹோமாகம பி.ச. | 0.30 | 100% | 100% |
| | மெததும்பர பி.ச. | 0.12 | 50% | 100% |
| | பாததும்பர பி.ச. | 0.08 | 100% | 100% |
| | தலவாக்கலை பி.ச. | 0.11 | 67% | 100% |
| மீள்சுழற்சி நிலையங்களை தாபித்தல் | வெலிகம ந.ச. | 2.96 | 118% | 100% |
| சுற்றாடல் பாதுகாப்பு நிலையங்களை தாபித்தல் (சேதனப் பசளைப் பிரிவுகளைத் தாபித்தல், மேம்படுத்தல் மற்றும் சேதனப் பசளைச் செயற்திட்டம்) | இரத்தினபுரி மா.ந.ச. | 1.55 | 143% | 100% |
| | குளியாபிடிய ந.ச. | 0.11 | 100% | 100% |
| | பத்தேகம பி.ச. | 0.69 | 100% | 100% |
| | தங்கல்ல பி.ச. | 2.04 | 100% | 100% |
| | கற்பிட்டி பி.ச. | 1.96 | 41% | 100% |
| | நொச்சியாகம பி.ச. | 0.89 | 100% | 40% |
| | கின்னியா ந.ச. | 1.93 | 75% | 100% |
| | மத்திய நுவரகம் பளாத பி.ச. | 0.24 | 26% | 100% |
| | மிணிபே பி.ச. | 3.36 | 129% | 90% |
| | மஹியங்கனை பி.ச. | 3.66 | 60% | 45% |
| | ஊவ பரணகம பி.ச. | 1.63 | 25% | 100% |
| | மடுல்ல பி.ச. | 0.04 | 40% | 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| குப்பை வகைப்படுத்தல் வாளிகளை வழங்குதல் | ஊவா மாகாணம் | 2.0 | 100% | 60% |
| | வட் மத்திய மாகாணம் | 2.0 | 100% | 60% |
| | கிழக்கு மாகாணம் | 2.0 | 100% | 60% |
| | வடக்கு மாகாணம் | 2.0 | 100% | 60% |
| | மத்திய மாகாணம் | 2.0 | 100% | 60% |
| | மேல் மாகாணம் | 2.5 | 100% | 60% |
| | வடமேல் மாகாணம் | 2.5 | 100% | ஆரம்ப நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன |
| | சப்ரகமுவ மாகாணம் | | | |
| | தென் மாகாணம் | 2.5 | 100% | 60% |
| | மாகாணம் | 2.5 | 100% | 60% |
| | இப்பாகமுவ பி.ச | 0.21 | 100% | 60% |
| **கூட்டு மொத்தம்** | | **42.67** | | |

## கழிவு முகாமைத்துவத்தின் பல்வேறு சந்தர்ப்பங்கள்

**மீள் சுழற்சி நிலையத்தினை தாபித்தல் - வெலிகம நகர சபை**





**சுற்றாடல் பாதுகாப்பு நிலையத்தினை தாபித்தல்**



கற்பிட்டி பிரதேச சபை



நொச்சியாகம பிரதேச சபை



இறுதிக் கழிவகற்றல் பிரதேசம் - இரத்தினபுரி நகர சபை




2013 தேசத்திற்கு முகுடம் கண்காட்சியுடன் இணைந்ததாக பாடசாலைப் பிள்ளைகளுக்காக நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் கலந்து கொண்ட பிள்ளைகளுக்கு அமைச்சுச் செயலாளரினால் பரிசுகள் வழங்கப்படல்.

**செயற்திட்டத்தின் படி கழிவு முகாமைத்துவத்திற்காக செய்யப்பட்ட செலவினம் அட்டவணை 03 இலும் வரைபடம் இல. 3 இலும் காட்டப்பட்டுள்ளது.**

| தொடர் இல. | செயற்திட்டம் | மேற்கொண்ட செலவினம் (ரூபா மில்.) |
|---|---|---|
| 01 | வீட்டு சேதனப் பசளை பீப்பாய் வழங்குதல் | 1.40 |
| 02 | குப்பைகளை வகைப்படுத்தல் தொட்டி வழங்குதல் | 20.21 |
| 03 | சுற்றாடல் பாதுகாப்பு நிலையங்களை தாபித்தல் | 21.06 |
| **மொத்தம்** | | **42.67** |

**அட்டவணை இல. 03**

**செலவினம் (ரூபா மில்.)**





**செயற்திட்டம்**

**வரைபு இல. 03**

| தொடர் இல. | மாகாணம் | செலவினம் (ரூபா மில்.) |
|---|---|---|
| 1 | மேல் | 2.80 |
| 2 | வடமேல் | 4.88 |
| 3 | ஊவா | 7.33 |
| 4 | மத்திய | 6.36 |
| 5 | வட மத்திய | 3.63 |
| 6 | வடக்கு | 2.00 |
| 7 | தென் | 7.69 |
| 8 | சப்ரகமுவ | 4.05 |
| 9 | கிழக்கு | 3.93 |
| **மொத்தம்** | | **42.67** |

**அட்டவணை இல. 04**

மாகாண அடிப்படையில் கழிவு முகாமைத்துவத்திற்காக செய்த உள்ளபடியான செலவினம் கீழே காட்டப்பட்டுள்ளது.




**வரைபு இல. 04**

### 9.5.2. கழிவு முகாமைத்துவத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டங்கள

.

| தொடர் இல. | செயற்திட்டம் | செயற்திட்ட அதிகார பிரதேசம் | மதிப்பிடப்ப ட்ட தொகை ரூபா மில். | நிதிசார் முன்னே ற்றம் ரூபா மில். | பௌதீக முன்னே ற்றம் |
|---|---|---|---|---|---|
| 1 | நாடளாவிய கழிவு முகாமைத்துவ போட்டியினை நடாத்தல் | நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து மிகச் சிறந்த கழிவு முகாமைத்துவ நிறுவனம் இதன் மூலம் தெரிவுசெய்யப்படுகிறது. | 3.765 | 2.98 | 100% |
| 2 | அம்பாறை - ஹாடி கல்லூரியில் இடம்பெற்ற 2013 நாட்டுக்கு மகுடம் கண்காட்சியினை ஒத்ததாக தூய்மையான நகர செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் (நாட்டுக்கு மகுடம் ஏற்பாடு) | அம்பாறை நகர சபை | 2.450 | 2.450 | 100% |
| | | உஹன பி. சபை | 1.642 | 0.328 | 100% |
| | | நாமல்ஓய பி.சபை | 1.352 | 0.270 | 100% |
| 3 | நாட்டுக்கு மகுடம் கண்காட்சியினை ஒத்ததாக பாடசாலைப் பிள்ளைகளிற்காக ஓவியப் போட்டியினை நடாத்தலும் பரிசளிப்பும் (அனுசரணை – Solex) | அம்பாறை பிரதேச பிள்ளைகள் இதில் பங்குபற்றினர். | 0.055 | 0.055 | 75% |
